## ‘தூத்துக்குடி மாவட்டம் என்றைக்குமே கழகத்தின் கோட்டை!’ என்பதை நிரூபியுங்கள்!

# தூத்துக்குடி மக்களுக்குத் துரோகம் செய்த எடப்பாடி பழனிசாமிக்கு வருகின்ற தேர்தலில் சரியான பாடம் புகட்டுங்கள்!

### ஒட்டப்பிடாரம் தொகுதி வேட்பாளர் ராமஜெயத்தை ஆதரித்து

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் !



**தூத்துக்குடி,ஏப்.17-**

**தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ராமஜெயம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``தூத்துக்குடிக்கு துரோகம் செய்த எடப்பாடி பழனிசாமியைத் தயவு செய்து இந்த மாவட்டத்துக்குள் நுழைய விடாதீர்கள். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லுங்கள், தூத்துக்குடி மாவட்டம் என்றைக்குமே கழகத்தின் கோட்டை என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். இங்கே நம் வெற்றி வேட்பாளர் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம் அவர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

முதலில் உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு சிறப்பான, அன்பான வரவேற்பு அளித்திருக்கிறீர்கள், முதலில் அதற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### உதயசூரியன் சின்னம்

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில், இந்த ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் நம் வெற்றி வேட்பாளர் ராமஜெயம் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று உங்களையெல்லாம் நேரில் சந்தித்து கேட்கவேண்டும் என்று நினைத்தேன். `உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்’ என்று உங்களையெல்லாம் கேட்க வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டுதான் வந்தேன். ஆனால், இங்கே உங்களின் எழுச்சி, உங்களின் ஆதரவு, உங்கள் அன்பையெல்லாம் பார்க்கும்போது ஏற்கனவே நீங்களெல்லாம் முடிவு செய்துவிட்டீர்கள் என்று தெரிகிறது. உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் ராமஜெயத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்த மாவட்டத்துக்குப் போனாலும் தூத்துக்குடிக்கு வரும்போதுமட்டும், ஒரு தனிப்பெருமைதான், கெத்துதான். நேற்று முழுவதும் திருநெல்வேலி முடித்துவிட்டு இன்று காலை தூத்துக்குடி மாவட்டத்தில் உங்களைப் பார்க்க நுழைகிறேன். உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது நிச்சயம் இங்கே ஒட்டப்பிடாரம் தொகுதியில் நம் ராமஜெயத்தின் உதயசூரியன் வெற்றி உறுதியாகிவிட்டது. தமிழ்நாட்டுக்கே ஓர் எடுத்துக்காட்டு மாவட்டமாக இருக்கக்கூடிய மாவட்டம்தான் தூத்துக்குடி மாவட்டம்.

### பழனிசாமி செய்த அநியாயம்

தொழில் வளர்ச்சி, விவசாயம், மீன்பிடித் தொழில், துறைமுகம், வர்த்தகம் என்று எல்லாமே கலந்திருக்கக்கூடிய, எல்லாவற்றிலுமே சிறப்பாகச் செயல்படக்கூடிய மாவட்டம்தான் இந்தத் தூத்துக்குடி மாவட்டம். அதேபோல மதச்சார்பின்மைக்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டுக்கே இருக்கக்கூடிய மாவட்டம் இந்தத் தூத்துக்குடி மாவட்டம்.

இந்தத் தூத்துக்குடியில் எடப்பாடி பழனிசாமி செய்த அநியாயத்தை, அக்கிரமத்தை யாராலும் மறக்கவே முடியாது, மறந்துவிடாதீர்கள். ஸ்டெர்லைட் போராட்டத்தில் காக்கா குருவியைச் சுடுவது போன்று 13 பேரைச் சுட்டுக் கொன்றவர்தான் எடப்பாடி பழனிசாமி. போதாக்குறைக்கு அதை, தொலைக்காட்சியில்தான் பார்த்துத்தான் தெரிந்துகொண்டேன் என்று சொன்னவர்தான் எடப்பாடி பழனிசாமி அவர்கள், என்பதை மறந்துவிடாதீர்கள். அதேபோன்று பழனிசாமியின் ஆட்சியில் சாத்தான் குளத்தில் எவ்வளவு பெரிய கொடுமை நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். காவல் நிலையத்திலேயே அப்பாவையும் மகனையும் வைத்து அறையில் அடித்துக் கொன்றுவிட்டார்கள். அவர்களின் மரணத்துக்கு நீதி வாங்கித் தரக்கூடிய ஆட்சி, நம் திராவிட மாடல் ஆட்சி, நம் முதலமைச்சர்தான் இன்று அந்த லாக்கப் மரணத்துக்கு ஒரு நீதியை வாங்கித் தந்திருக்கிறார்.

### நம் வெற்றி வேட்பாளர்

தூத்துக்குடிக்குத் துரோகம் செய்த எடப்பாடி பழனிசாமியைத் தயவுசெய்து இந்த மாவட்டத்துக்குள் நுழைய விடாதீர்கள். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லுங்கள், தூத்துக்குடி மாவட்டம் என்றைக்குமே கழகத்தின் கோட்டை என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். இங்கே நம் வெற்றி வேட்பாளர், நல்ல வேட்பாளரைத் தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். எனக்கு என்ன பெருமை என்றால், நான் இளைஞர் அணியின் செயலாளர், என்னுடன் இளைஞர் அணியில் மாவட்ட அமைப்பாளராகப் பணியாற்றக்கூடியவர்தான் சகோதரர் ராமஜெயம் அவர்கள். நல்ல சுறுசுறுப்பாக, ஆற்றலுடன் எப்பொழுதுமே மக்களோடு மக்களாக இருப்பவர். வெறும் தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் மக்களை வந்து சந்திக்கிறவர் கிடையாது. வருடம் முழுவதும் எந்த நேரத்திலும் சுகதுக்கங்களில் எப்பொழுதும் மக்களுடன் இருந்து மக்களுக்காகப் பணியாற்றக்கூடியவர்தான் ராமஜெயம் அவர்கள். இவரின் நல்ல செயல்பாடுகளைப் பார்த்துதான் இன்று தலைவர் அவர்கள், இவருக்கு இப்படி ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். ஆகவே மக்களுக்குப் பணியாற்ற ராமஜெயத்துக்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள், ஒட்டப்பிடாரத்தில் ராமஜெயத்துக்கு உதயசூரியன் சின்னத்தில் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### தொகுதிப் பிரச்சினை பற்றி பேசுவார்

ராமஜெயம் அவர்கள் வாரத்துக்கு ஒரு முறை என்னை வந்து சென்னையில் பார்ப்பார். ஒவ்வொரு முறையும் என்னைப் பார்க்கும் போது அவருக்குத் தனக்கு இது வேண்டும், தனக்கு இந்த வேலை வேண்டும் என்று எதுவுமே கேட்டது கிடையாது. என் தொகுதிக்கு இதைச் செய்து கொடுங்கள், என் தொகுதியில் இந்தப் பிரச்சினை இருக்கிறது இதைச் சரி செய்து கொடுங்கள், என் மக்களுடைய பிரச்சனைகள் இவை, என்னுடைய கோரிக்கைகள் இவை, இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுங்கள் என்றுதான் ஒவ்வொரு முறையும் என்னைப் பார்க்கும்போது வந்து கேட்பார். அப்படிப்பட்ட ஒரு நல்ல வேட்பாளரை இந்தச் சட்டமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, சட்டபேரவைக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்.

### ராமஜெயத்தின் வெற்றி

நான் ஒரு வேட்பாளர் தெரியுமா? நான் இந்தத் தேர்தலில் போட்டி போடுகிறேன் தெரியுமா? எனக்கு அவ்வப்பொழுது நினைவூட்டுங்கள், நான் மறந்துவிடுகிறேன். நான் என் தொகுதிக்கே இதுவரைக்கும் ஒரு நாள்தான் சென்று வாக்கு கேட்டிருக்கிறேன். வெற்றி பெறச் செய்துவிடுவார்கள் என்று நம்பிக்கை இருக்கிறது, தலைவர் எனக்கு இரண்டாவது முறை வாய்ப்பு கொடுத்திருக்கிறார். என் தொகுதிக்குப் போகாமல் நான் இங்கே ஒட்டப்பிடாரம் வந்து உங்களையெல்லாம் பார்த்து நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்துக்கு ராமஜெயத்துக்கு வாக்கு கேட்க வந்திருக்கிறேன் என்றால் ஏன், தெரியுமா? எனக்கு என் வெற்றியை விட மிக மிக முக்கியம் ராமஜெயத்தின் வெற்றி, இந்த ஒட்டப்பிடாரம் தொகுதி வெற்றி. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியை விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் இந்த ஒட்டப்பிடாரத்தில் நீங்கள் சகோதரர் ராமஜெயத்தை வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும்.

### திராவிட மாடல் அரசு திட்டங்கள்

ராமஜெயத்தைக் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன், `உதயசூரியனுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள்’ என்று கேட்க வந்திருக்கிறேன். எந்த உரிமையில் கேட்க வந்திருக்கிறேன்? நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் இந்தத் தொகுதிக்கு பல்வேறு திட்டங்களைக் கொடுத்திருக்கிறார், அந்த உரிமையில் உங்களிடம் கேட்க வந்திருக்கிறேன்.

வ.உ.சிதம்பரனார் பிறந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புக்காக கழக அரசு எடுத்த முயற்சியால் 16,000 கோடி ரூபாய் முதலீட்டில் வின்ஃபாஸ்ட் (VinFast) மின்சாரக் கார் தொழிற்சாலையை நம் முதலமைச்சர், நம் திராவிட மாடல் அரசு இங்கே கொண்டு வந்தது.

மாப்பிள்ளையூரணி ஊராட்சியில், 2,500 பேருக்கு பட்டா வழங்கியது திராவிட மாடல் ஆட்சி, நம் முதலமைச்சர்.

2023-இல் பெய்த பெருமழையின் போது இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொருவருடைய குடும்ப அட்டைக்கும் 6,000 ரூபாய் நிவாரணத் தொகை கொடுத்தது நம் முதலமைச்சர் அவர்கள், மறந்துவிடாதீர்கள்.

அய்யனடைப்புப் பகுதியில் நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் சார்பாக, 220 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தருவைக்குளம் கடற்கரைக் கிராமத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி நடைபெற்றுள்ளது.

2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பனிக்கட்டி நிலையம் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோரம்பள்ளம் குளம் தூர்வாரப்பட்டு உப்பாறு ஓடையிலும் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீனாட்சிப்பட்டி பரம்பிலிருந்து முடிவைத் தானேந்தல் கிராமத்துக்கு ஆற்றுக்குடிநீர் இணைப்பு வழங்கிக் கொடுத்திருக்கிறோம்.

தன்னூத்து, பாஞ்சாலங்குறிச்சி, நாணல் காடு, கலப்பப்பட்டி உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு இன்று புதிதாக நியாயவிலைக் கடைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

வீரபாண்டியபுரம், அக்காநாயக்கன்பட்டி, சில்லானத்தம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

செக்காரக்குடி, பொட்டலூரணி சாலையில் பெரிய மேம்பாலங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வல்லநாடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்குத் தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு 515 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்தி இருக்கிறோம்.

இவ்வளவு திட்டங்களையும் செய்து கொடுத்துவிட்டு உதயசூரியனுக்கு இன்னொரு வாய்ப்புக் கொடுங்கள், ராமஜெயத்துக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று அந்த உரிமையோடு கேட்க வந்திருக்கிறேன். நீங்கள் ராமஜெயத்தை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்பினீர்கள் என்றால் நிச்சயம் உங்களின் தொகுதிக்கு, ஒவ்வொரு பகுதிக்கும், ஒவ்வொரு தெருவுக்கும் என்னென்ன தேவையோ அதைப் பார்த்துப் பார்த்து உங்களிடம் வந்து கேட்டு அதை நிச்சயம் செய்து கொடுப்பார் என்கிற வாக்குறுதியை நான் கொடுக்கிறேன்.

இந்தத் தொகுதிக்கு இவ்வளவு செய்திருக்கிறோம். நம் ஆட்சி அமைந்து இந்த ஐந்து வருடத்தில் நம் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தியுள்ளார்கள்.

### கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் என்னென்ன சொன்னோமோ அத்தனை வாக்குறுதிகளையும் செய்து கொடுத்திருக்கிறோம். உதாரணமாக நம் முதலமைச்சர் 2021-இல் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம். இன்று ஒவ்வொரு மகளிரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள்.

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகள் காலையில் பசியோடு இருக்கக்கூடாது என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். காலையில் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால் தரமான காலை உணவு கொடுக்கிறார், அதற்குப் பிறகு தரமான கல்வியைக் கொடுக்கிறோம். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய் கொடுக்கிறோம். தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம்.

சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன்னால் முதலமைச்சர் முடிவெடுத்துக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு 10 லட்சம் மடிக்கணினிகளை நம் முதலமைச்சர் கொடுத்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இன்று மாதந்தோறும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகை திட்டத்தை நம் முதலமைச்சர் கொடுத்து வருகிறார். அதை நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் திட்டம் போட்டார்கள். தேர்தலைக் காரணம் காட்டி மூன்று மாத உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு நீதிமன்றத்துக்குப் சென்றிருக்கிறார்கள். ஆனால், நம் முதலமைச்சர் என்ன செய்தார்? நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்த முயற்சி செய்கிறீர்களா? 5,000 ரூபாய் கொடுப்பேன் எப்படி நிறுத்துகிறீர்கள் பார்ப்போம் என்று சொல்லி கொடுத்தாரா இல்லையா? பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் என மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000, கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என்று 5000 ரூபாயை, ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு, ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் முதலமைச்சர் கொடுத்தார்.

நம் தலைவர் காலை 06:30 மணிக்குக் கொடுத்தார், வங்கியில் பணத்தை அனுப்பினார். மகளிர் 09:00 மணிக்கெல்லாம் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டீர்கள். ஏன்? ஏனென்றால் மோடி அரசு வங்கியில் குறைந்த பட்ச இருப்பு இல்லை என்று சொல்லி அந்தப் பணத்தை எடுத்துவிடுவார்கள் என்கிற அந்த எண்ணத்தில் எடுத்துவிட்டார்கள்.

### நீங்கள் அளிக்கும் வாக்கு

அதேபோல 23 ஆம் தேதி காலையில் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்குப்பெட்டியில் இரண்டாவது இடத்தில் ராமஜெயத்தின் பெயர் இருக்கும். அதற்குப் பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். அதில் நீங்கள் அளிக்கும் வாக்கு உங்களின் வெற்றியை உறுதி செய்யும். கடந்த முறை கிட்டத்தட்ட 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தீர்கள். இந்த முறை குறைந்தது 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் ராமஜெயம் அவர்களை வெற்றிபெற வைக்க வேண்டும்.

சில வாக்குறுதிகள் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் இப்பொழுது 1,000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், ஆட்சி அமைந்த உடனே அதை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரை உள்ளதை எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். கல்வி உதவித் தொகை 1,000 ரூபாய் அல்ல 1,500 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று சொல்லியிருக்கிறோம். முதியோர் உதவித் தொகை இப்பொழுது 1,200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், ஆட்சிக்கு வந்த உடனே அதை 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்த ஐந்து வருடத்தில் 35 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து வருடத்தில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அத்தனை பேருக்கும் வீடு கட்டித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### மகளிர் கைகளிலும் 8,000 ரூபாய்

ஆட்சிக்கு வந்த உடனே அனைத்து மகளிர் கைகளிலும் 8,000 ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துவிடுவார். அதை வைத்துக்கொண்டு நீங்கள் உங்களின் வீட்டுக்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவையோ அதை நீங்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளலாம். இவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால், வருகின்ற 23 ஆம் தேதி நம் ராமஜெயம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும்.

உதயநிதி வந்தார், பேசினார், திட்டங்கள் எல்லாம் சொன்னார், வாக்குறுதி கொடுத்தார், கலைந்து போய்விட்டோம் என்று போய்விடக்கூடாது. இன்று தேதி 15, தேர்தல் நாள் 23, இன்னும் ஏழு நாட்கள் இருக்கின்றன.

நீங்கள் ஒவ்வொருவரும் நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டீர்கள். அது போதாது. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த ஒரு வாரம் இந்த பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். ஏன் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்? ஏன் ராமஜெயத்தை வெற்றி பெற வைக்க வேண்டும்? இந்த ஐந்து வருடம் என்னென்ன திட்டங்கள் கொடுத்திருக்கிறோம்? மீண்டும் ஆட்சிக்கு வந்தால், என்னென்ன செய்வோம்? முக்கியமாக அடிமைக் கூட்டத்தையும் சங்கிக் கூட்டத்தையும் தமிழ்நாட்டுக்குள் விடக்கூடாது என்கிற அந்தப் பிரச்சாரத்தை நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். சேர்த்தீர்கள் என்றால், நிச்சயம் ராமஜெயம் அவர்கள் குறைந்தது 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் இங்கே வெற்றி பெற்றாக வேண்டும்.

### காலை வாரி விட்டார்

இதுதான் அந்தப் புகைப்படம். கீழே ஒருவர் படுத்திருக்கிறார், தெரிகிறதா, யார் என்று? எடப்பாடி பழனிசாமி. இதைத்தான் நான் சொன்னேன் `இப்படி அடிமையாக இருக்காதீர்கள் கொஞ்சம் எழுந்து மேலே வாருங்கள்’ என்று. இப்பொழுது என்ன சொல்லிவிட்டார் தெரியுமா ‘ஆமாம் நான் காலைப் பிடித்துதான் முதலமைச்சர் ஆனேன், என்று கூறிவிட்டார். `அந்த அம்மா என்னை முதலமைச்சர் ஆக்கினார் அதற்காகக் காலில் விழுந்தேன்’ என்றார். நான், `காலில் விழுந்தது தவறு என்று சொல்லவே இல்லை, காலில் விழுந்து முதலமைச்சர் ஆன உடனே அந்த அம்மா சிறைக்கு சென்றவுடன் ‘நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்’ என்று கேட்டு அந்த அம்மாவுக்கு துரோகம் செய்தார். அதைத்தான் நான் குறையாகச் சொன்னேன்.

இப்பொழுது சசிகலா அம்மாவே கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் ‘அந்தத் தம்பி சொல்வது சரிதானே. நீ வந்து என் காலில் விழுந்தாய். பிறகு நான் முதலமைச்சர் ஆக்கினேன் நீ என் காலை வாரி விட்டுப் போனாய்’ என்று இப்பொழுது அவர்கள் கேட்டுவிட்டார்கள். அதனால், இப்பொழுது நாம் வெளியே வந்து வேடிக்கைப் பார்ப்போம், அவர்கள் இரண்டு பேரும் பேசித் தீர்த்துக்கொள்ளட்டும். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் நம் தலைவர் மீண்டும் மீண்டும் சொல்வது போன்று இந்தச் சட்டமன்றத் தேர்தல் ‘டெல்லி (வெர்சஸ்) தமிழ்நாடு’. டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா? தமிழ்நாடு அணி நாம் வெற்றிபெற்றுக் காட்ட வேண்டும், டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும்.

### இது சுயமரியாதை மண்

நான் இவ்வளவு திட்டங்கள் சொன்னேனல்லவா இதற்கு ஒன்றிய பா.ஜ.க அரசு நம் தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது துணையாக நின்றிருக்கிறதா? தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் தருவதில்லை. நமக்கு வரவேண்டிய நிதி வருவதில்லை, கல்வி நிதி கொடுக்கமாட்டேன் என்கிறார்கள், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான், கொடுப்போம் என்று சொல்கிறார்கள். மும்மொழிக் கொள்கையில் என்ன இருக்கிறது? மீண்டும் இந்தித் திணிப்பை, தமிழ்நாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிதான் மும்மொழிக் கொள்கை. அதனால்தான் நம் முதலமைச்சர், `முடியாது’ என்று கூறிவிட்டார். இப்படி ஒன்றிய அரசு நம்மீது திணிப்பவற்றையெல்லாம் எதிர்த்து நின்று கேள்வி கேட்டு, அதைத் துணிந்து எதிர்க்கக்கூடிய ஒரே தலைவர் இந்தியாவிலேயே நம் தலைவர்தான்.

எனவே, அந்தத் தலைவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள். பி.ஜே.பி. மற்ற மாநிலங்களுக்குள் எல்லாம் உள்ளே வந்துவிடுகிறது ஆனால், தமிழ்நாட்டுக்குள் மட்டும் வர முடியவில்லை. ஏன்? ஏனென்றால், இது சுயமரியாதை மண். நாம் யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டோம் என்று மீண்டும் மீண்டும் சொல்கின்ற மண். அதனால் ஏற்கனவே பத்து தோல்வி கொடுத்திருக்கிறீர்கள். பத்து தோல்வி பழனிசாமியை இந்தத் தேர்தலோடு மொத்தத் தோல்வி பழனிசாமியாக்கி வீட்டில் உட்கார வைக்க வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன் ராமஜெயத்துக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்களின் குரலாக, உங்கள் பகுதியின் குரலாக, உங்கள் தொகுதியின் குரலாக நிச்சயம் சகோதரர் ராமஜெயம் அவர்கள் சிறப்பான ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருப்பார் என்கிற வாக்குறுதியை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி. ஆதரிப்பீர் உதயசூரியன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

ஒட்டப்பிடாரம் வேட்பாளர் ராமஜெயம், திருச்செந்தூர் வேட்பாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், தொகுதிப் பார்வையாளர் அப்துல் மாலிக், மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாடசாமி, செந்தூர்மணி, பொதுக்குழு உறுப்பினர் ராஜலட்சுமி, ஒன்றிய-பகுதி-கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, இளையராஜா, ஜெயக்கொடி, சரவணக்குமார், சுப்பிரமணியன், ராமசாமி, சுரேஷ்காந்தி, சிவக்குமார், காந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பால்துரை, ஸ்டாலின், சுதாகர், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய ஜனநாயகக் கட்சி, மக்கள் நீதி மய்யம், எஸ்.டி.பி.ஐ, மனிதநேயக் கட்சி ஆகியவற்றின் நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.